**ஊடக அறிக்கை**

**பொறியியல் துறையில் பட்டதாரி தகுதிகாண் பரீட்சை (GATE) 2019**

இலங்கை உட்பட ஆறு வெளிநாடுகளின் பல்வேறு நிலையங்களில் எதிர்வரும் வருடம், 2019 பெப்ரெவரி 2 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை பொறியியல் துறையில் தகுதிகாண் பரீட்சை (GATE) நடக்கவிருப்பதை அறிவிப்பதில், இந்திய உயர் ஸ்தானிகராலயம் மகிழ்ச்சி அடைகிறது. IIT, NIT மற்றும் IISC போன்ற பொறியியல்/விஞ்ஞான நிலையங்களில் பல்வேறுபட்ட பட்டப் பின்படிப்பு திட்டங்களுக்கு தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு GATE தகுதி மிகவும் அத்தியாவசியமானதாகும்.

gate.iitm.ac.in எனும் இணையத்தளத்தில் அவசியமான விபரங்களை கிடைக்கப் பெறலாம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் மதிப்பு வாய்ந்த இந்திய கல்வி நிலையங்களில் கற்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இறுதித் திகதி செப்டெம்பர் 21 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம்.

***

06.09.2018